# மகுடம்

# MAKUDAM

MAKUDAM
That they all may be one

இதழ் : 12 makudam2007@yahoo.com பங்குனி: 01.03.2008

பல்சுவை மாத இதழ்

## இந்தியாவின் இந்திரா



20ஆம் நூற்றாண்டின் இணையற்ற பெண்மணி

NAVALY Y.M.C.A ESTD. - 1891

வெளியீடு:
நவாலி Y.M.C.A
விலை = 20/-

## ஆசிரியர் இதயத்திலிருந்து.....


**பாசமிகு வாசகர்களே!**

மறுபடியும் இவ்வருடத்தின் மார்ச் மாத இதழ் ஊடாக உங்களோடு பேசுவதையிட்டு மகுடம் பெருமை கொள்கிறது. ஒரு வயதுடன் தவழ்கின்ற மகுடம் குழந்தையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர்கள் நீங்களே. அன்புடன் தூக்கி வளர்த்தீர்கள்: அழுதபோது பாலூட்டினீர்கள்: தடக்கி விழுந்தபோது தூக்கி விட்டீர்கள்: சோர்வுற்றபோது தாங்கினீர்கள்: வளர்ச்சியைக் கண்டு பாராட்டினீர்கள். நீங்கள் தாயாக இருந்து அரவணைத்து, பாலூட்டிச் சீராட்டி வளர்த்த உங்கள் குழந்தை இன்று நன்றிப் புன்னகையோடு உங்களோடு பேசுகின்றது.

நீங்கள் பேசாவிட்டால் மகுடம் எப்படிப் பேசுவான்? நீங்கள் எழுதாவிட்டால் மகுடம் எப்படி வெளியில் வருவான்? நீங்கள் பாராட்டாவிட்டால் அவன் எப்படி மகிழ்ந்திருப்பான். ஆகவே அவனுடன் பேசுங்கள்: தொடர்ந்து எழுதுங்கள்: பாராட்டுங்கள்: ஆலோசனைகளைத் தாருங்கள்.

அன்பு நெஞ்சங்களே! இப்போது தான் மகுடம் எழுந்து நடக்கின்றான். அவன் மேலும் வளர உங்களின் பங்களிப்பு விமர்சனங்கள் என்பவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அப்போதுதான் மகுடம் பல் துறையிலும் வளர முடியும்.

மகுடம் தவழ நாம் நடப்போம். மகுடம் நடக்க நாம் வளர்வோம். மகுடம் வளர நாம் வாழ்வில் மகுடம் சூடுவோம். தங்கள் அனைத்து அரவணைப்புக்களுக்கும் நன்றி



-ஆசிரியர்-


## மகுடம்

இதழாசிரியர் :- வண.A.S.T.ஆனந்தன்
துணை ஆசிரியர் :- M. மதுராஜ்
இணை ஆசிரியர் :- A. பியூலா
ஆசிரியஆலோசகர்:-
திரு. நவாலியூர் நடேசன்
வண. S. ஜோன் லிங்கேஸ்வரன்
திரு. N. சத்தியவேந்தன்

| | |
|---|---|
| பிரதிகள் | :- 500 |
| நூலின் வகை | :- பல்சுவை இதழ் |
| வெளியீடு | :- நவாலி Y.M.C.A |
| பக்கங்கள் | :- 24 |
| விலை | :- 20/= |
| பதிப்பு | :- றூபன் பிறிண்டேர்ஸ். |


## வெற்றி பெற்றவர்களின் கவனத்திற்கு!

மகுடம் இதழினால் மாதந்தோறும் நடாத்தப்படுகின்ற போட்டிகளில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு இதுவரை பரிசில்களைப் பெறாத வாசகர்கள் புதன் கிழமைகளில் மாலை 3.00 மணி தொடக்கம் 5.00 மணிக்குள் நவாலி Y.M.C.A ல் உள்ள எமது காரியாலயத்திற்கு வருகை தந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர் குழு


உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள், கடிதங்கள், விளம்பரங்கள், வாழ்த்துக்கள் போன்ற சகல தொடர்புகளுக்கும்,
ஆசிரியர்.
மகுடம் சஞ்சிகை
நவாலி Y.M.C.A
மானிப்பாய்.
T.P : 0774651244
E mail:- makudam2007@yahoo.com

சிந்தனைக்கு.....



"மனிதனின் வாழ்வில் தோல்வியும், வெற்றியும் இரு கண்கள்
தோல்வியைக் கண்டு சோர்ந்து போகாமலும் வெற்றியைக்
கண்டு மமதை கொள்ளாமலும் இருந்தால்
எந்தக் காரியத்திலும் வெற்றி கொள்ளலாம்"

# தகப்பனின் அன்புக் கடிதம்


நீங்கள் வாசிக்கப்போகும் இந்தக் கடிதம் முற்றிலும் உண்மையானது. இந்த வார்த்தைகள் தேவனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறபடியால் இவைகளுக்குச் செவி கொடுங்கள்! அப்போது உங்கள் ஜீவியம் நிச்சயமாய் மாறிவிடும்.

என் பிள்ளையே.........

- என்னை நீ அறிந்திருக்க மாட்டாய், ஆனால் உன்னைப் பற்றிய சகலத்தையும் நான் அறிந்திருக்கிறேன்......
- உன் உட்காருதலையும் உன் எழுந்திருத்தலையும் நான் அறிந்திருக்கிறேன்......
- உன் வழிகள் எல்லாம் எனக்குத் தெரியும்......
- நீ கர்ப்பத்தில் உருவாகு முன்னே உன்ன அறிந்திருக்கிறேன்......
- ஏதோ 'பிழையாக' நீ உருவாகிடவில்லை! ஏனெனில் உன் நாட்களெல்லாம் என் புத்தகத்தில் எழுதியிருக்கிறது......
- உன் பிறப்பின் காலத்தையும், குடியிருப்பின் எல்லையையும் நானே முன்குறித்திருக்கிறேன்......
- நான் தூரமானவனும் கோபமானவனும் அல்ல...... மாறாக அன்பின் முழு நாமம் நானே......
- உன் எதிர்காலத்திற்கு நான் கொண்டிருக்கும் சிந்தனைகள் கடலின் மணலைப் பார்க்கிலும் அதிகம்......
- நானே உன் இருதயத்தை தேற்றுபவன்......
- உனக்கு நன்மை செய்வதில் இருந்து நான் ஒருபோதும் பின்வாங்கமாட்டேன்......
- என் ஏக்கமெல்லாம் ஒரே கேள்வியெல்லாம், நீ என் பிள்ளையாய் இருப்பாயா?......
- நான் உனக்காக காத்திருக்கிறேன்......

மிகுந்த அன்புடன், உன் அப்பா,
"சர்வவல்ல தேவன்"

## மனிதா!!! நீ எங்கே போகிறாய்???



# எங்கள் தங்கத்தாத்தா

யாழ்ப்பாணத்து நவாலியூரின்கண் பிறந்த பெரியாரே "தங்கத்தாத்தா" என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் நவாலியூர் சோமசுந்தரப் புலவராவார். அவர் கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை ஆகிய இருவரிற்கும் தவப்புதல்வராக 1878ஆம் ஆண்டு யூலை மாதம் 10ம் திகதி நவாலி ஊரில் பிறந்தார். சிறுவயதில் இருந்தே இறைபக்தி மிகுந்தவராகக் காணப்பட்டார். நெற்றியிலே நீற்றின் முக்குறியும், அதன் நடுவிலே அமைந்த சந்தனத்திலகமும், குங்குமத்திலகமும் அவரைச் சிவப்பழமாகக் காட்டும். அவரது வெள்ளிய அழகார்ந்த தாடியோ காற்றில் அசைந்து சோபிக்கும். அவர் வெண்துகில் புனைந்து மெல்லென நடை பயின்று வருவது ஒரு தனியழகாகும். இவ்வாறான தோற்றமுடையவர் தான் எங்கள் செல்லத்தாத்தா.

இவர் இளமைப்பருவத்தில் தமிழ்மொழியை மானிப்பாய் அருணாசலப்புலவரிடமும், ஆங்கிலத்தை மானிப்பாய் மாரிமுத்து உபாத்தியாரிடமும் கற்றார். சிறுவயதிலேயே பாடல்களை ஆக்கும் வல்லமை உடையவராக விளங்கினார். முதன் முதலில் பதினைந்து வயதில் நவாலி அட்டகிரி முருகன் மீது பதிகம் பாடினார். பின் ஆசிரியர் பணியை மேற்கொண்டு ஆங்கிலம், தமிழ் என்பவற்றுடன் இதிகாசம், புராணம் ஆகிய பாடங்களையும் மாணாக்கர் மனங்கொள்ளத்தக்க வகையில் கற்பித்தார். அதனால் மாணவர்களது மனத்திலிருந்து நீங்காத இடம் பெற்றார்.

அவர் சிறுவர்களுக்கான பல பாடல்களைப் பாடினார். அவற்றுள் "ஆடு கதறியது", "ஆடிப்பிறப்பு", "கத்தரித்தோட்டத்து வெருளி" முதலிய பாடல்கள் எல்லோரையும் கவர்ந்தவை ஆகும்.

புலவர் அவர்கள் பதினாறாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் "இலங்கை வளம்", தால விலாசம்", "சிறுவர் செந்தமிழ்", "கதிரைச்சிலேடை வெண்பா" என்பன பிரசித்தி பெற்றனவாகும். "உயிரிளங்குமரன்" என்னும் நாடகத்தை எழுதி நடிப்பித்துப்பலராலும் பாராட்டப்பட்டார். அந் நாடக மேடையில் நவாலி மக்களால் அவருக்கு "புலவர்" பட்டம் வழங்கப்பட்டது. புலவர் அவர்கள் 1953ம் ஆண்டு ஏழாம் மாதம் பதினோராம் திகதி இறைபதம் எய்தினார். இன்று அப்பெரியார் இல்லை எனினும் அவர்தம் அழியாப் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

இன்று எமது புலவரை நினைவு கூரும் முகமாக யாழ்/நவாலி மகா வித்தியாலய சமூகமானது வித்தியாலய முன்றலில் அவரது சிலையினை அமைத்து நன்றி செலுத்தி கௌரவித்துள்ளமையை நினைத்து நாம் பெருமை கொள்கின்றோம். எனவே மாணவர்களாகிய நாம் தங்கத்தாத்தாவின் வழி நின்று அவரைப் போற்றிக் கல்வி கற்று உயர்வடைவோமாக.

த. தமிழினி, தரம் – 09
யா/நவாலி. ம. வி

## வாழ்த்துகின்றோம்



நவாலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. த. ஸ்ரீவிமலேஸ்வரன் J.P அவர்கள் லயன்ஸ் கழகத்தின் மானிப்பாய் வட்டத்திற்குரிய தலைவராக அண்மையிலே தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சமூக சேவையிலும், மனிதாபிமானப் பணிகளிலும் சிறந்து விளங்கும் இவர் மென்மேலும் அரிய பணிகளை காலத்தின் தேவை அறிந்து செய்ய மகுடம் சார்பாக வாழ்த்துகின்றோம். இறைபலன் இவருடனிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

நவாலி Y.M.C.A ஸ்தாபனத்தினரும்,
மகுடம் குடும்பத்தினரும்.

## கவிபுனைவோம்

**இதழ் 11 இன் கவிபுனைவோம் "நட்பு" என்னும் தலைப்பிற்கு எமக்கு அனுப்பப்பட்ட கவிதைகளில் தெரிவு செய்யப்பட்ட கவிதைகள்.**

1st
சேர்ந்தும் உறவாடும்
பிரிந்தும் உறவாடும்
என்றென்றும் உறவாடுவது
நட்பு........
செ. சியாமளா

2nd
நண்பர்கள்
பிரிவதில்லை
பிரிவதற்கு – அவர்கள்
உறவுகள் அல்ல உணர்வுகள்
**R. Mathijalakan**

3rd
எவ்வித எதிர்பார்ப்புமின்றி
வாழ்விலும் தாழ்விலும்
வேதனையிலும் விரக்தியிலும்
தோள் கொடுத்திடும் உன்னத
உறவு! றூபி விமலதாஸ்

பார்த்தவுடன் வராதது நட்பு
பழகியதன் விளைவே நட்பு
உள்ளத்தின் உணர்ச்சியே நட்பு
மனதின் இலக்கணமும் நட்பே
**S. ரவிசாந்**

பொறுமையுள்ளவன்
நட்பினைப் பெறுவான்
பொறுமை அற்றவன்
நட்பினைப் பெறான்
**S. M. Logini**

**"அடுத்த வெளியீட்டில் முற்றிலும் வித்தியாசமான புதிய போட்டியை ஆவலுடன் எதிர்பாருங்கள்......"**

---

## S.M.S பதில் – 4

1. மகுடப் பல்சுவை இதழ் தனது முதலாவது பிரதியை எந்த மாதத்தில் வெளியிட்டது?
   A – பங்குனி B – மாசி C – ஆனி
2. புற்றுநோய் ஆராய்ச்சி நிலையமும், வைத்தியசாலையும் எங்கு அமைந்துள்ளது.
   A – கொழும்பு B – தம்புள்ள C – மகரகம
3. முதல் விண்வெளிப் பயணி யார்?
   A – யூறிககாறின் (ரஷ்யா) B – ஆம்ஸ்ரோங் C – எட்வின்

**பதில்களுக்கு முன்னர் வெளிவந்த மகுடங்களைப் பாருங்கள்**

நீங்கள் MAKUDAM SMS என Type செய்து கேள்வி இலக்கத்தையும் சரியான பதிலிற்குரிய ஆங்கில எழுத்தையும் Type செய்து உங்கள் பெயர்,முகவரியையும் குறிப்பிட்டு 0774651244 எனும் இலக்கத்திற்கு 30.03.2008இற்கு முன்னர் SMS செய்யுங்கள்.

Eg :- ( MAKUDAM SMS - 4 (1 - A, 2 - B, 3 - C) Your Name, Your Address)

சரியான விடையளித்தோரில் 3 அதிர்ஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா 50/= Reload செய்யப்படும்.

**SMS பதில் 3**

விடை 1 - B, 2 - A, 3 - C

50/= Reload பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1) M. Mayooran
   Jaffna
2) V. Jananee
   Anaikoddai
3) T. Thanushan
   Navaly East.



## விஞ்ஞான விளக்கங்கள்

*1) மெழுகுவர்த்திச் சுவாலையை எத்திசையில் பிடித்தாலும் அதன் சுவாலை மேல் நோக்கியே எரிகின்றது.*

திண்ம மெழுகின் ஆவியானது அடர்த்தி வேறுபாடு காரணமாக மேல்நோக்கியே எழும். இதனால் எத்திசையில் பிடிக்கப்பட்டாலும் மேல்நோக்கியே சுவாலை எரியும்.

*2) இறைச்சி சமைக்கும் போது இறைச்சியை மென்மையாக்குவதற்கு அதனுள் பப்பாசித் துண்டுகள் சேர்க்கப்படுவதுண்டு.*

இறைச்சியில் புரதம் அடங்கியுள்ளது. இறைச்சி மென்மையாவதற்கு புரதம் சமிபாடடைய வேண்டும். புரதச் சமிபாட்டுக்கு நொதியம் தேவை. பப்பாசிப் பாலில் இச்சமிபாட்டு நொதியம் உண்டு.

*3) மண்ணெண்ணெய் விளக்கிற்கு சிறிதளவு உப்பைச் சேர்த்தால் சுவாலையின் பிரகாசம் அதிகரிக்கின்றது.*

உப்பில் சோடியம் அயன்கள் காணப்படுகின்றன. இது மஞ்சள் நிற சுவாலையுடன் எரியும். மண்ணெண்ணெயுடன் உப்பைச் சேர்க்கும் போது சோடியம் அயன் எரிவதால் பிரகாசம் அதிகரிக்கும்.

*4) நீரிழிவு நோயினால் உண்டான புண் விரைவில் குணமடைவதில்லை.*

நீரிழிவு நோயாளிகளின் குருதியில் அதிகளவு குளுக்கோஸ் காணப்படுவதால் புண்களில் கிருமிகள் பல்கிப்பெருகத் தேவையான உணவு இலகுவில் கிடைக்கின்றது. இதனால் புண் குணமடைவது தடுக்கப்படுகின்றது.

*5) மழைக்காலங்களில் சில கதவுகள், ஜன்னல்கள் மூடமுடியாது இருக்கும்.*

சில பலகைகள் நீரை உறிஞ்சும் தன்மை கொண்டவை. அதனால் நிலையை விடவும் கதவுகள், ஜன்னல்கள் பெரிதாகின்றன. இதனால் மூட முடியாமல் போகின்றன.

**N. Rajinakumar**

## பொது அறிவு

1. மனிதனின் குருதியில் நான்கு வகை உண்டெனக் கண்டறிந்தவர் யார்? வான்ட்ஸ் ரேன்
2. 27ஆவது ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது? அமெரிக்கா
3. ஈழத்திலே முதன் முதல் வெளியிடப்பட்ட தமிழ் நூல் எது? சரசோதி மாலை
4. எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்தவர் யார்? உரோஞ்சன்
5. 2000ஆம் ஆண்டில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் யார்? தென்கொரிய ஜனாதிபதி கெங்டே ஜோங்
6. உலகிலே மிகப்பெரிய திரை எங்குள்ளது? கியூபா
7. எமது உடலில் நாம் பிறந்ததிலிருந்து வளராத உறுப்பு எது? கண்விழி
8. முதன் முதலில் எயிட்ஸ் நோயைக் கண்டு பிடித்தவர் யார்? லொக் பொனிட்டர்
9. இலங்கையின் புகழ்பூத்த பெண் பத்திரிகையாளர் யார்? ரீட்டா செபஸ்ரியன்
10. சத்தியசோதனை நூலை எழுதியவர் யார்? மகாத்மா காந்தி

ஆக்கம் : ரி.டி.ஞானேஸ்
மானிப்பாய் வை.எம்.சி.ஏ

## WIFE என்றால்

W - Wonderful
I - Instrument
F - For
E - Enjoyment

அபூர்வமான கருவியை அனுபவி



### உங்களுக்குத் தெரியுமா

உங்கள் வயிறு சுமார் ஒரு லீற்றர் உணவுவரை கொள்ளும். இது மற்ற ஜீரண உறுப்புக்களுக்குச் செல்லுவதற்கு 2 முதல் 6 மணித்தியாலங்கள் எடுக்கும். நீங்கள் ஒரு பொருளை வாயில் போடுகிறீர்கள் என்றால் அது பெருங்குடலைத் தாண்டி ஆசனவாய் வழியாக வெளியேறுவதற்கு சுமார் 12 மணித்தியாலங்கள் எடுக்கும்.

### வத்திக்கான்

பரப்பளவில் மிகச்சிறிய நாடு வத்திக்கான் நகரம் [Vatican city]. அதன் பரப்பளவு 44 ஹெக்ரேயர். இங்கு வாழும் மக்கட்தொகை சுமார் 1000பேர் ஆகும்.

# பெண்



## பெண்ணின் பொறுமை நிரந்தரப் பெருமை

பெண் என்பவள் பொறுமையின் உறைவிடம். அந்தப் பொறுமையை அவள் இழக்கும் போது மனித வாழ்வே விபரீதத்துக் குரியதாகி விடுகிறது. சிறந்த பொக்கிஷமான பொறுமை பெண்களுக்கு மட்டுமல்லாது ஆண்களுக்கும் சிறப்பானதே. எனினும் பொறுமை எனும் ஆபரணத்தைப் பெண் அணியும் போதுதான் அது பெருமைக்குரிய தாகிறது.

வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளிற் பயணம் செய்யும் போது பெண்ணுக்குப் பொறுமையே சிறந்த வழித்துணையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் பெண் பொறுமை யுடையவளாக இருந்ததால் தான் பல குடும்பங்கள் மங்காது நன்கு பிரகாசித்தன. புராண, இதிகாச கதைகள் இதற்கு விளக்கம் கூறுவனவாக அமைந்துள்ளன.

சீதை மாயமானின் குரலைக் கேட்டபோது சிறிது பொறுமையுடன் சிந்தித்திருப்பாளேயானால் இராவணனால் அவளைக் கவரவே முடியாது. சில நிமிடங்கள் பொறுமையுடன் நிதானித்து சிந்தித்துச் செயலாற்ற முடியாத காரணத்தால் அவள் அசோகவனத்தில் 14 ஆண்டுகள் பொறுமையுடன் காலம் கழிக்க வேண்டியதாயிற்று.

அதே போன்று மகாபாரதக் கதாநாயகியான பாஞ்சாலியும் வளவளப்பான தரையைக் கண்டு தண்ணீர் என நினைத்து துச்சாதனன் தன் வேஷ்டியைத் தூக்கிக் கொண்ட போது பொறுமை இழந்து ஏளனமாய் நகைத்தாள். கௌரவர் களிடையேயும், பாண்டவர்களிடையேயும் கசப்புணர்வு ஏற்பட்டு பாரதப்போர் நடக்க அதுவும் ஒரு காரணமாக அமைந்தது. இவ்வாறு பல புராண, இதிகாசக் கதைகள் பெண்கள் ஒரு சில நிமிடங்கள் பொறுமை இழப்பதால் வாழ்நாள் முழுவதும் துயரப்படும் கதைகளையும் சம்பவங்களையும் விளக்குகின்றன.

ஒவ்வொரு நிமிடத்தையும் நன்கு சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவள் பெண். சில சந்தர்ப்பங் களில் அவள் சில விநாடிகளில் மட்டுமே பொறுமையை இழந்தாலும் கூட அதுவே எதிர் காலத்தில் நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தி விடக்கூடும். குடும்பங்களில் பெண் பொறுமை இழந்தால் வீடு போர்க்களமாகி, வீட்டு விடயங்கள் தெருவுக்கும், நீதிமன்றத்திற்கும் சென்று குடும்பங்களில் நிரந்தர பிரிவுகள் ஏற்படுகின்றன.

அயலவர்களுடன் சண்டைப் பிடிப்பது, வீண் வார்த்தை பேசுவது, கணவனைக் கடுகடுத்த முகத்துடன் எதிர்நோக்குவது பொறுமையின்மையின் அறிகுறியாகும். பெண்ணைப்பற்றி அர்த்தசாஸ்திரம் கூறும் போது "பெண்ணானவள் குளிர்ந்த வதனமும், புன்னகையும், பொறுமையும், அமைதியும் கொண்டவளாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகிறது.

பொறுமைக்கு உதாரணமாய் பூமியைக் குறிப்பிடுவார்கள். தோண்டத் தோண்ட அமைதியுடன் விளங்குவது நிலம். அந்த நிலமகளைப் போன்றே எத்தனை துன்பங்கள் வரினும் பொறுமையைக் கைவிடாது வாழ்பவளே இந்த பெண். "பொறுமையென்றும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள்"

- A.நேசமலர், ஆசிரியர்,
இளவாலை கன்னியர்மடம்

## வீட்டுக்கு வீடு

ஒருமுறை வேக வைத்த காய்கறிகளை திரும்ப வேக வைக்காதீர்கள். அடிக்கடி வேகவைப்பதால் பிரியோசனமில்லை. காலையில் 8 மணிக்குச் சமைத்து, மறுபடியும் பகல் 12 மணிக்கு வேகவைத்துச் சாப்பிடுவது தவறாகும்.

மொத்தமாக வாங்கி வைக்கும் எண்ணெய்யில் சக்கு மணம் வராமலிருக்க நான்கைந்து வற்றல் மிளகாய்களைக் போட்டு வைக்கலாம். இப்படிச் செய்தால் எத்தனை நாட்களானாலும் சக்கு மணம் வராது.

காய்ந்து போன கறிவேப்பிலையை எறியாமல் பிட்டு, இடியப்பம், இட்லி அவிக்கும் நீரில் போட்டு வேகவைத்தால் உணவுப்பதார்த்தம் நல்ல வாசனையுடன் இருக்கும்.

சர்க்கரைப் பொங்கல் தயாரித்து இறக்குவதற்கு முன்னர் அன்னாசிப் பழம் இரண்டு துண்டுகளை மிக்ஸியில் அடித்து ஒரு கரண்டி சாறைப் பொங்கலில் ஊற்றினால் பொங்கல் சுவையாக இருக்கும்.

கடுகு தாளிக்கும் போது வெடித்துப் பறப்பதைத் தடுப்பதற்கு கடுகு வாங்கி வந்தவுடன் இலேசாக வறுத்துக் கொள்ளவும்.

# கலையும் சமூகமும்

உலக சமூகத்தில் வாழும் மக்களது மனதைத் தூய்மைப்படுத்தி மனவளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு அரிய சாதனமே கலை. கலைஞர்கள் தனி மனிதர்களே. ஆயினும் அவர்கள் நமது சமூகத்தின் அங்கங்களே. கலைஞனின் திறன் வெளிப்பாடே கலைப்படைப்பு ஆகும். ஒரு கலைப் படைப்பில் இரு சாரரை சந்திக்கிறோம்.

* கலைஞன் உருவாக்கிய சமூகம்
* கலைஞன்

கலைப்படைப்பில் இரண்டும் பதியப்பட்டு உள்ளன. உதாரணமாக ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலியில் இந்திய சமூகத்தையும் சந்திக்கலாம். அதே வேளை தாகூர் என்ற மனிதனையும் சந்திக்கலாம். அதாவது குறிப்பிட்ட சமூகத்தின் லயம் குறிப்பிட்ட கலைப்படைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும். சில கலைஞர்கள் முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருப்பதுண்டு.

இவ்வாறு சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் கலையென்பது சமூகத்தின் ஆக்கச்சுட்டிதான். எல்லாக் கலைப்படைப்பும் தாம் எழுந்த சமூகத்தின் பிரதிநிதிகளாகவே உள்ளன. குறிப்பிட்ட சமூகத்தின் நம்பிக்கை, பிளவுகள், அழகியல் என்பவற்றை எல்லாம் பரிமாற்றும் ஊடகமாக கலை அமையும். சிலப்பதிகாரம் வணிக உடமை காலத்தை வெளிப்படுத்துவது போல் ரவிவர்மனின் ஓவியங்கள் காலணித்துவகால இந்தியாவின் பண்பாட்டை பிரதிபலிக்கின்றன. கோயிற்சிற்பங்கள் பல்லவர்கால இந்தியாவையும் அதன் பக்திநெறியையும் எடுத்துக் காட்டுகிறது.

"அனித்த சங்கர் ரோய்" எனும் அழகியல்வாதி கலையென்பது ஒரு வகைக் காட்சி என்று கூறினார். எனினும் சமூகமும், கலையும் ஒட்டிப்பிறந்த பிள்ளைகளே ஆவார்கள்.

ஆக்கம் :- செல்வி. செ. சியாமளா, ஆசிரியர் - காரைநகர்

## முத்திரை உலகின் முதன்மைகள்

1. தட்டு வடிவான முத்திரையை உலகுக்கு முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?
   **மலேசியா**
2. நினைவுத்தபால் முத்திரையை உலகுக்கு முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?
   **பெரு**
3. உலகில் முதலாவது உத்தியோகபூர்வ முத்திரையை முதலில் வெளியிட்ட நாடு எது? எந்த ஆண்டில் வெளியிடப்பட்டது?
   **பிரித்தானியா, 1840இல்**
4. தபாலட்டையை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு எது?
   **அவுஸ்திரேலியா**
5. இலங்கையில் Y.M.C.A ஸ்தாபனத்தின் நூற்றாண்டை நினைவு கூர்ந்து வெளியிடப்பட்ட முத்திரையின் வடிவம் என்ன?
   **முக்கோணம்**

ரீ. டிலக்ஷி, தரம் – 10. உடுவில் மகளிர் கல்லூரி

## பாதங்களைப் பராமரிப்போம்

வாழ் நாள் முழுவதும் கூடவே இருந்து பல தொல்லைகளைத் தரும் நோய்களில் நீரிழிவு நோயும் ஒன்றாகும்.

முழுமையாக குணப்படுத்த முடியாது என்பது அறிவியல் பூர்வமான உண்மை என்றாலும் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இயல்பாக வாழ முடியும்.

இந்நோய் பற்றிய அறியாமையும், அலட்சியமும் பல சிக்கல்களையும், உடல் உறுப்புக்களை இழக்கவும் செய்து விடுகின்றது. இந்நோய் இருப்பவர்களுக்கு உணர்ச்சி குறைவாகக் காணப்படுவதால் காயங்கள் ஏற்பட்டாலும் வலி அதிகமாகத் தெரிவதில்லை. சிறிய காயமாக இருந்தாலும் மிக மிக அவதானமாகவும், சுத்தமாகவும் பராமரித்துக் கொள்ள வேண்டும். மேற்புறம் காய்ந்து விட்டது போலிருந்தாலும் உட்புறம் ஈரத்தன்மை இருக்க வாய்ப்புண்டு.

வாகனங்களில் என்ஜின் இருக்கும் இடங்களில் அமர்ந்து பயணிப்பதைத் தவிர்க்க வேண்டும். என்ஜின் சூடு கால்களில் கொப்புளங்களை ஏற்படுத்தும்.

புதிதாக பாதணிகள் அணியும் போதும் கால்களில் காயம் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். நகம் வெட்டும் போது நக இடுக்கில் காயம் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் இரண்டு தடவை சோப் போட்டு இளஞ்சூட்டு நீரில் பாதங்களை கழுவி விரல் இடுக்கு களையும் ஈரமில்லாமல் துடைத்துக் கொள்ள வேண்டும்.

காரமில்லாத ஓடிகோலோன்களைப் பூசலாம். வீட்டிலும் வெளியேயும் காலணியின்றி நடக்கவே கூடாது.

நோயாளிகள் தமது பாதங்களை சுய பரிசோதனை செய்து கொள்வது மிக அவசியம்.

# மருத்துவம்

## வீட்டு வைத்தியம்

- ★ அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் முற்றிய மஞ்சள் நிற முருங்கை இலையைப் பிழிந்து சாறு எடுத்து சாப்பாட்டிற்கு பின் ஒரு தேக்கரண்டி சாப்பிட்டு வந்தால் நோய் குணமாகும்.
- ★ வாய்ப்புண்கள் உள்ளவர்கள் கடுக்காயை அரைத்து புண் மீது பூசினால் வலி குறையும்.
- ★ பாலும் சீனியும் கலக்காத தேநீரை எலுமிச்சைப் பழச்சாற்றில் கலந்து குடித்தால் வயிற்றுப் போக்கு உடனே குணமாகும்.
- ★ ஒன்று அல்லது இரண்டு சொட்டு துளசிச் சாறு நாள் ஒன்றுக்கு மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் தடிமன் குணமாகும்.
- ★ தீக்காயங்கள் மீது மரவள்ளிக்கிழங்கு இலையை அரைத்து தீப்புண் மீது பூசினால் குளுமையாக இருக்கும். தீப்புண்ணும் விரைவில் ஆறிவிடும்.
- ★ ஒரு தேக்கரண்டி இஞ்சிச்சாறு, ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி சீரகம் மூன்றையும் ஒன்றாக கலந்து ஒரு நாளைக்கு ஒரு தரம் சாப்பிட்டு வந்தாலும் இரத்த அழுத்த நோய் குணமாகும்.

### தக்காளியின் மருத்துவ பயன்கள்

1. தக்காளியைத் தினசரி சாப்பிட இரத்தம் ஊறும். இரத்தம் சுத்திகரிக்கப்படும்.
2. தக்காளிச் சாற்றுடன் தேன்கலந்து சாப்பிட உடற்பலம் சுறுசுறுப்பு ஏற்படும்.
3. தக்காளியை மாவாக அரைத்துச் சிறிதளவு பால், எலுமிச்சைச்சாறு கலந்து முகத்தில் தடவி வர முகம் பளபளப்பாகும்.
4. தக்காளிச் சாற்றை எலுமிச்சைச் சாற்றுடன் கலந்து சிறிது உப்பு சேர்த்து அருந்த தொண்டைப்புண் மாறும்.
5. தக்காளிச் சாறில் நெல்லிச்சாறு கலந்து சாப்பிட நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

## SCHOOL DAYS ARE THE BEST DAYS

School days are the best days of your life. New experiences in your life begins when you start school at the age of life. At first it may not be a joyous one because everyone seems to be a stranger. Then gradually life becomes interesting. You make friends, you learn new things and your Teacher becomes a fascinating person.


As you grow older life is full of new experiences. Not only in education but also in sports and extra curricular activities. Guiding and Scouting make life very rich. In fact Guiding has taught me much. From the time I joined the "Brownies" and then the Guides, life has been a rich experience where the important things in life were etched in my mind. I was taught to honour and respect my religion, my parents, my country and in fact everyone. It also taught me mainly to be bold and courageous. The many Guide rallies I attended brought me in contact with the Guides all over Sri Lanka. It was also an opportunity to visit many places. Life was at its best. The trips and tours enriched my life. I learnt a lot. It continued in a never ending interesting process of adventure and experience.

School days are the best. The friendship and the traditions of the school are still there though time has flown and things have changed.

**Miss. Kamsha Sothirajah, 2008 Arts J/ Manipay Memorial College**


## Let's learn English / ஆங்கிலம் பயில்வோம்

1. Pearl of the Indian ocean
   **Ceylon / Sri Lanka**
2. Roof of the World. **Tibet**
3. Land of the rising sun
   **Japan**
4. Land of the midnight sun
   **Norway**
5. Dark continuant of the world
   **Africa**
6. Land of thousand rivers
   **Finland**
7. The gift of nile. **Egypt**
8. Sorrow of china
   **Quanko river (Yellow river)**
9. City of the golden gate
   **San Francisco**
10. Playground of Europe.
    **Switzerland**




**T. Dilani, Navaly**
**U.G.College, Grade - 10**

1. Make hay while the sun shine
   காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
2. A friend in need is friend indeed
   அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
3. Look before you leap
   ஆழம் அறியாது காலை வையாதே
4. Face is the index of the mind
   அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
5. All that glitters is not gold
   மின்னுவதெல்லாம் பொன்னல்ல
6. Guilty concious pricks the mind
   குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறுக்கும்.
7. A bird in the hand is worth two in the bush
   கையில் நெய் இருக்க வெண்ணெய்க்கு அலைவானேன்.



தமிழ்த் தேன் - துளி 9

# பயனற்றவர்கள்!

கவனிப்பாரற்றுக் கிடக்கும் காணிகள் சிலவற்றில் தமது பாட்டிலே முளைத்து செழித்து வளர்ந்து நிற்கும் முட்பற்றைகள், செடி கொடிகள், பயன்கொடா மரங்கள் முதலியவற்றை நாம் காண்கின்றோம். அவற்றால் காணிச் சொந்தக் காரருக்கு நல்ல பயன் எதுவும் இல்லை. மாறாக சுகாதாரக்கேடும், துஷ்ட பூச்சி புழுக்களின் புகழிடங்களாகவும் அவை இருக்கும்.

வாழ்க்கையில் நொந்த சிலருக்கு இரத்த உறவினர் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தாலும் அவர்களில் சிலர் அந்த முட்பற்றைகள், பயன் கொடா மரங்கள் போல் தமது உறவினர்க்கு பயனற்றவர்களாக வாழ்வதை நாம் அறிவோம்.

இந்த அடிப்படையில் "பயனற்றவர்கள்" குறித்து விவேக சிந்தாமணி நூலில் ஒரு பாடல் கூறும் நமது வாழ்வியலோடு ஒட்டிய கருத்தை படிப்போரது சிந்தனைக்குத் தருகின்றேன்.

**ஆபத்துக் குதவாப் பிள்ளை**
**அரும்பசிக் குதவா அன்னம்**
**தாகத்தைத் தீராத் தண்ணீர்**
**தரித்திரம் அறியாப் பெண்டிர்**
**கோபத்தை யடக்கா வேந்தன்**
**குருமொழி கேளாச் சீடன்**
**பாவத்தைத் தீராத் தீர்த்தம்**
**பயனில்லை ஏழுந் தானே**

பெற்றோர்க்குச் சேவை செய்வது பிள்ளைகளின் கடமை. வயது போன காலத்தில் அதுவும் ஓர் ஆபத்தான வேளையில் பெற்றோர் தமக்கு உதவி வேண்டி தவிக்கிறார்கள். ஒரே ஒரு மகன் - அல்லலுறும் அந்தப் பெற்றோர் முன் நிற்பதே அவமானம் என்று அவர்களைத் திரும்பியும் பார்க்காது நண்பர்களோடு நாகரீகமாக உடையணிந்து கொண்டு ஊர் சுற்றப் போகிறான் அந்த உதவாப் பிள்ளை.

ஏழை ஒருவனுக்கு எரியும் தீ போலப் பசி. யாரோ கொடுத்த வெறுஞ்சோறு மாத்திரம் இருக்கிறது. அந்தச் சோறு சமைத்தவரின் "சமயற் கலைத்திறனால்" மண், கல்லுடன் அவிந்தது பாதி, அவியாதது பாதியாக உள்ளது. அதைச் சாப்பிட முடியுமா?

இன்னொருவனுக்கு தாகத்தால் நா வறண்டு மயக்கம் போடும் நிலை. குடிக்கத் தண்ணீர் அயலில் இல்லை சேற்றின் துர்நாற்றம் வீசும் சாக்கடை நீர் பெருகி ஓடும் வாய்க்காலின் ஓரத்தில் அவன் இருக்கின்றான். அந்தத் தண்ணீரை அவன் குடிக்க முடியுமா?

வேறொருவன் எப்படித்தான் கஷ்டப்பட்டு உழைத்தாலும் சாப்பாட்டிற்கே அது போதா திருக்கிறது. கடன் சுமைகளோடு திண்டாடுகிறான். மனைவியோ மற்றப் பெண்களைப் போல் தனக்கு நகையில்லை, நவநாகரிகமான ஆடைகள் இல்லை யென்று கணவனுக்குத் தொல்லை கொடுப்ப தோடு ஒரு துரும்பாகக் கூட அவனை மதிக்காது ஏசுகிறாள். கண்ணீரும் சிந்திக் கொள்கிறாள்.

நீதி வழுவா நெறிமுறையிலே மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு மன்னன் அற்ப விடயத்திற்கும் கோபத்தால் சீறியெழுந்து கொடுங் கோலனாகின்றான். நாடு அல்லற்படுகின்றது.

ஒரு சீடன் தான் அதிகம் கற்றுணர்ந்து ஞானம் பெற்றுவிட்டதாக நினைத்து கர்வம் கொண்டு தனது குருவின் அருள் மொழிகளைத் தட்டி நடக்கிறான். அவனது ஆத்மீகப் பாதை தடம்புரள்கிறது.

பாவங்களைத் தீர்க்கும் புனித தீர்த்தம் என்று ஒருவன் பாத்திரத்தில் ஏதோ கொண்டு வந்தான். அது மாத்திரம் பாவங்களைப் போக்கி விடுமா? ஒன்றுமே நடக்கவில்லை.

ஆபத்து வேளையில் பெற்றோருக்கு உதவாத பிள்ளை, தரித்திரத்தை அறியாத மனைவி, கோபத்தை அடக்காத வேந்தன், குருவின் வார்த்தைகளைக் கேட்காத சீடன் ஆகியோர் மனிதர்கள். அவர்களை பசிக்கு புசிக்க இயலாத சோறு, தாகத்திற்கு குடிக்க உதவாத தண்ணீர், பாவத்தைத் தீர்க்காத தீர்த்தம் ஆகிய சடப்பொருட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி தூண்டி முடிவில் "பயனில்லை ஏழுந்தானே" என்று அவை அத்தனையையும் ஒரே நிலையில் ஒப்பிட்டு ஒதுக்கித் தள்ளி விடப்படுகிறது. பாடலின் தத்துவச் செறிவும் உவமானங்களின் எளிமையும், இனிமையும் இன்பத் தேனை ஊட்டுகின்றன.

- கபிலர் -

(தேன்துளி சொட்டும்....)

**சிறுகதை**

# நட்பிற்காக.......

பாரதி கிராமம் எனப்படும் கிராமமானது ஓர் அழகான சிறிய குளமும் பல கோயில்களும் அடங்கிய அமைதியான கிராமமாகும். இந்தக் கிராமத்தில் தான் சுதன் வாழ்ந்து வந்தான். இவன் தன்னுடைய பெற்றோரில் அதிக அன்பு கொண்டிருந்தான். அதே போலவே அவனுடைய பெற்றோரும் தமது ஒரே மகன் மீது அளவுக்கதிகமான அன்புடையவராகவே இருந்தனர். சுதன் தன்னுடைய கிராமத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்று வந்த பொழுதுதான் சாந்தனைச் சந்தித்து இருவரும் உயிர் பிரியா நண்பர்கள் ஆனார்கள். இருவருமே பாடசாலையில் படிப்பிலும், ஏனைய செயற்பாட்டிலும் முதல்நிலை மாணவர்களாக இருந்தார்கள். இவர்களைப் பார்க்க ஏனைய மாணவர்களுடைய உள்ளத்திலே வெறுப்புத் தோன்றும். இவர்கள் இருவரையும் பிரிப்பதற்காக பல சூழ்ச்சிகள் செய்தனர். ஆனாலும் அது வெற்றியளிக்கவில்லை. இவ்வாறாக இவர்களைப் பிரிப்பதற்காகச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த நண்பர்களுக்கு ஓர் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

சுதனுடைய வயல் நன்றாக விளைந்து அறுவடைக் காலத்தை நெருங்கி இருந்த நேரத்திலே குமார் அந்த வயலில் நெருப்பு வைத்துவிட்டு அந்தப் பழியை சாந்தனுடைய பெயரில் போட்டு விட்டான். இதனைக் கண்டு கோபம் கொண்ட சுதனுடைய பெற்றோர் சாந்தனுடனும் இவர் தாயுடனும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திச் சண்டை பிடித்தனர். இந்த விடயங்கள் எதுவுமே சுதனுக்குத் தெரியாது. ஏனென்றால் சுதன் தன்னுடைய பாடசாலை விடுமுறைக்காக தன்னுடைய மாமாவின் வீட்டிற்குச் சென்றிருந்தான். சுதன் திரும்பி வந்த தன்னுடைய நண்பனைச் சந்திப்பதற்காகச் சென்ற பொழுது சாந்தனுடைய வீடு பூட்டப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் அயல் வீட்டில் இருந்த கமலா கூறினாள், "சுதன் நீ உனது உயிர் நண்பன் என்று சொன்னாயே அவன் உங்களுக்கு என்ன செய்தான் தெரியுமா?" "என்ன செய்தான்" என்று சுதன் கேட்க, அவள் கூறினாள் "அவன்தான் உங்கட வயலைக் கொழுத்தி விட்டானாம்". என்ன கமலா சொன்னாய். சாந்தன் வயலைக் கொளுத்தி விட்டானோ? ஆம் அவன்தான் கொளுத்தி விட்டானாம். இதனாலே எங்க பஞ்சாயத்து தீர்ப்பின்படி அவர்கள் இந்த வீட்டை விட்டே போய் விட்டார்கள் என்றாள் கமலா. இதனைக் கேட்ட சுதனுக்கு அவளைப் பார்த்து ஒரு பதிலும் சொல்ல முடியாதவளாகத் திகைத்துப் போய் நின்றாள். அவனைப் பார்த்த கமலா மனமிரங்கி சுதன் வீட்டில் வந்து இருந்து கொஞ்சம் செல்லப் போகலாம் வா எனக் கூப்பிட்டாள். இந்த ஆறுதலான வார்த்தை சுதனுடைய உள்ளத்தைத் தொட்டது. அவனும் வீட்டினுள் சென்றிருந்தான். கமலா தேநீர் கொண்டு வந்து கொடுத்து விட்டு சுதனைப் பார்த்துக் கமலா கூறினாள். "சுதன் உங்களுடைய வயலைச் சாந்தன் கொளுத்தியிருக்க மாட்டான். இதில் ஏதோ சதியிருக்கிறது. ஏனென்றால் உங்கள் இருவருடைய நட்பினைப் பார்க்கின்ற எனக்கே பொறாமையாக இருக்கிறது. உங்களைப் போல எனக்கு ஒரு நண்பன் இல்லையே என்று. ஆகவே நீ மனஅமைதியாக வீட்டிற்குப் போ. அங்கே உன்னுடைய பெற்றோர் ஏதாவது சொன்னால் அதனைப் பெரிசுபடுத்தாதே, உங்களுடைய புனிதமான நட்பிற்கு எப்பொழுதுமே களங்கம் வராது" என கமலா ஆறுதலான வார்த்தைகளால் சுதனுடைய காயங்களை ஆற்றி அனுப்பினாள். கமலாவின் ஆறுதலான வார்த்தைகளோடு சுதன் வீட்டில் இருந்த பொழுது அவனுடைய வீட்டிற்கு வந்து சென்ற அநேகர் அவனது நண்பனைப் பற்றித் தவறாகப் பேசினர். அதனைக் கேட்கும் பொழுது கோபமடைந்து


இதனை எனது நண்பன் செய்யவில்லை என்பதை நான் உங்களுக்குத் தெரியப்படுத்துவேன் என்று கூறினான். இவ்வாறு பல நாட்கள் உருண்டு சென்றன. திடீரென ஒரு நாள் குமார் விபத்திற்கு உட்படுத்தப்பட்டு இரத்தம் இல்லாதவனாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அந்த நேரத்தில் அங்கு வந்த சுதனும், சாந்தனுமே குமாருக்கு இரத்தம் கொடுத்து அவனுடைய உயிர் பிழைக்கச் செய்தனர். தனக்கு இரத்தம் கொடுத்த அந்தப் புனிதமான நட்பிற்கு களங்கம் ஏற்படுத்தி விட்டேன் என்பதை உணர்ந்த குமார் தன்னுடைய குற்றத்தைச் சுதனுக்கும், சாந்தனுக்கும் கூறி இதற்குக் காரணம் உங்களைப் போன்ற நண்பர்கள் எனக்கு இல்லாமையாலேதான் நான் இவ்வாறு செய்தேன் என்றான். அதனைக் கேட்ட சுதனும் சாந்தனும் இதுவரையும் நாம் இருவருமே நண்பர்களாய் இருந்தோம். ஆனால் இனிமேல் நாங்கள் நான்கு பேரும் நண்பர்களா இருப் போம் எனக் கூறி, தம்முடன் குமாரையும், கமலாவையும் சேர்த்துகொண்ட னர். இச்செய்தி பாரதி கிராமம் எங்கும் பரவியது. அங்கிருந்தவர்களும் இவர் களைப் போல நண்பராக இருக்க வேண்டுமென்று கூறி, நட்பினை மென் மேலும் வளர்க்க வெள்ளைக் கொடி யினைக் காட்டினார்கள்.



– கங்கா பிரசாத் –

இறையியல் கல்லூரி

## திருடர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள...



1. பணத்தை தேவையான அளவில் கையில் வைத்துக் கொண்டு மற்றதை வங்கியில் இடுங்கள்.
2. கூடுதலாக நகைகளை அணிந்து கொண்டு வெளியில் செல்வதை தவிருங்கள்.
3. சிறு குழந்தைகளை வீட்டில் காவலுக்கு வைத்துவிட்டு வெளியில் செல்வதை தவிருங்கள்.
4. அலுமாரியை எந்நேரமும் பூட்டி சாவியை மறைவான இடத்திலே வைக்க பழகிக் கொள்ளுங்கள்.
5. ஆண்கள் இல்லாத நேரத்தில் இனம் தெரியாத நபர்கள் வந்தால் உள்ளே அனுமதிக்காதிருங்கள்.
6. அயல் வீட்டார் நண்பர்களாக இருந்தாலும் வீட்டில் உள்ள அலுமாரியைத் திறப்பதையும், அதன் சாவி மறைத்து வைப்பதையும் அவர்களுக்கு முன்பாக செய்யாதிருங்கள்.
7. கையடக்கத் தொலைபேசியாக இருந்தாலும் அதை வரவேற்பறையில் வைக்காதிருங்கள்.
8. இரவில் அழைப்பு மணி அடித்தவுடன் அல்லது யாரும் அழைத்தவுடன் உடனே கதவைத் திறந்து வெளியே செல்லாதிருங்கள். யார் வந்திருக்கிறார்கள் என்பதை உறுதி செய்த பின்னரே கதவைத் திறவுங்கள்.
9. பிச்சைக்காரர் போல் வருபவர்களிடமும் சந்நியாசி போல் வருபவர்களிடமும் அவதானமாக இருங்கள்.
10. அயலகத்தாருடன் நல்லுறவைப் பேணிக் கொள்வதுடன் ஆபத்து நேரத்தில் ஒன்றாக கூடுவது குறித்து முன்கூட்டியே திட்டமிடுங்கள்.
11. வீட்டை விட்டு வெளியேறும் போது எங்கே போகிறீர்கள் என்றும் எப்போது வருவீர்கள் என்றும் உண்மையை பகிரங்கப்படுத்தாதீர்கள்.
12. ஆபத்து ஏற்படும் வேளையில் இலகுவான வழியில் இரண்டு "டம்ளரை" எடுத்து, தட்டி, ஒலியெழுப்பவும். அதைக் கேட்ட அயலவர்களும் அப்படியே செய்யவும் பழகிக் கொண்டால் அனைவரையும் விழிப்படையச் செய்ய முடியும். ஒன்று கூடவும் வாய்ப்பு உண்டாகும்.

# கிறிக்கெட் வரலாற்றில் சுவையான தகவல்கள்

**எதிரணியினருக்கு உதவி செய்தால்..... "அவுட்"**

சில துடுப்பாட்ட வீரர்களுக்கு உதவி செய்யும் இளகிய மனம் உண்டு. ஆனால் கிறிக்கெட்டில் உதவி செய்தால் "அவுட்" தப்ப முடியாது.

1983, நவம்பர் மாதம் மேற்கிந்திய - இந்திய அணிகளுக்கிடையேயான போட்டி. முதல் சுற்று ஆட்டம். டெஸ்மெண்ட் கெயின்ஸ் 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததாக நடுவர் அறிவித்தார். "அவுட்" காட்டிய நடுவரிடம் கெயின்ஸ் தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு (அவர் LBW என நினைத்தார்) தவறு எனச் சுட்டிக்காட்டினார். ஆனால் நடுவர் அவர் LBW ஆக "அவுட்" ஆகவில்லை என்றும் பந்தைக் கையால் எடுத்து பந்துவீச்சாளரிடம் எறிந்ததே அவுட் ஆவதற்குக் காரணம் என்றும் கூறினார். பாவம் கெயின்ஸ் தலையைக் குனிந்து கொண்டு மைதானத்தை விட்டு வெளியேறினார்.

1985ஆம் ஆண்டு இந்தியாவின் மொகிந்தர் அமர்நாத்தும் அவுஸ்திரேலியாவுடனான ஒரு போட்டியில் பந்தைக் கையால் எடுத்து அப்பாலே எறிந்தார். மட்டையால் தட்டியிருந்தால் "அவுட்" இல்லை. பாவம் அவர்.

**மதகுருவாகவும், கிறிக்கெட் வீரராகவும் விளங்கியவர்**

மதகுருவாகவும் கிறிக்கெட் வீரராகவும் தன் வாழ்நாளைக் கழித்தவர் யார் தெரியுமா? இங்கிலாந்து அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் வண.டேவிட்ஷேப்பேட் (Rev. David Shepherd) இங்கிலாந்து அணியில் நீண்ட காலமாக விளங்கிய மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர்.

இவரது வாழ்வில் மறக்கமுடியாத அனுபவம் ஒன்று நடைபெற்றது. அவுஸ்திரேலியாவுடனான ஒரு போட்டி. அவுஸ்திரேலிய வீரர் "நீல் ஹார்வி" மட்டை பிடித்து ஆடிக்கொண்டு இருந்தார். "ஹார்வி" கொடுத்த ஒரு பிடியை (கட்ச்) டேவிட் ஷெப்பேட் தவற விட்டுவிட்டார். இவர் மதகுருவாச்சே. பந்து வீசிய ட்ரூமனுக்கு கோபம். ஆனாலும் அடக்கிக் கொண்டார்.

அடுத்த பந்து. அதே போல் ஹார்வி கொடுத்த அடுத்த பிடியையும் டேவிட் ஷெப்பேட் தவறவிட்டு விட்டார். அப்போது ட்ரூமனுக்குக் கோபத்தை அடக்க முடியவில்லை. விரைவாக டேவிட் ஷெப்பேட்டிடம் நடந்து சென்றார். "வணக்கத்துக்குரியவரே! வாழ்நாள் முழுவதும் இரண்டு கைகளையும் சேர்த்துக் கடவுளைக் கும்பிட்டுப் பழக்கம் தானே. அப்படிக் கைகளைச் சேர்த்துப் பந்தைப் பிடியும். இது கூட உமக்குச் சொல்லித்தர வேண்டுமா?" என்று பேசிவிட்டார். பாவம் டேவிட் ஷெப்பேட் மதகுருவாச்சே பொறுமையுடன் பேச்சை வாங்கிக் கொண்டு தொடர்ந்து விளையாடினார்.

தொகுப்பு :- ஏயெஸ்ரி

தொடரும் .........

# கவியருவி

## வேதனை

வேதனை யம்மா வேதனை
உனை நம்பி உதித்திட்ட - எனை
உதைத்து உருக்குலைத்து
கருக்கலைக்கும் தாயே
அந்த வேதனை உனக்குப் புரியுமா?
உடலின் ஒவ்வொரு அனுவிலும்
ஊசிகள் பல கொண்டு
புண்ணாக்கி சதைகளை
கரைத்திடும் போது நான்
கதறும் குரலொலி கேட்குமா?
குளிருக்கும் வெயிலுக்கும்
மழைக்கும் பனிக்கும்
உன் உடல் படும் வேதனையே
தாங்காய் - ஆனால்
என்னுடல் அனுவனுவாய்
பிய்த்தெடுத்து இரத்தநாளங்கள்
வெடித்திட வைக்கிறாயே
நீ தாயா இல்லை நரம் தின்னும் பேயா

தமிழ்தாசன்




## நான் என்ன முடமா?

கண்கள் இருந்தும் பார்க்க முடியாதவளாய்
கால்கள் இருந்தும் நடக்கமுடியாதவளாய்
இருக்கும் எனக்கு விடிவு எப்போது?
உறவுகள் இருந்தும்
உறவாட முடியாதவளாய்
ஊமையாய் இருக்கும் நான்
மனிதரின் துன்பங்களை
அனுபவிக்காமல்
சிட்டுக்குருவி போல் இன்பமாய்
இருப்பது நலமே

தர்சா.ச, சங்கானை

## ENNAVAN



கண்ணுக்குள் - உன்னை
சிறை வைத்தேன்.
மனச் சிதை மேட்டில் - உன்னை
விதையாய் விதைத்தேன்
உன் "லப் டப்" ஒலிக் கீற்றை மட்டும்
என் உள்ளத்துள்
சுதந்திரமாய் விளையாட விட்டேன்
உன் இதயம் எங்கேயோ
அங்கேயே என் இதயம்.

செ. சியாமளா
பண்டத்தரிப்பு பங்கு

## மாறாதா இந்நிலைமை



சத்தமின்றி
தினமும் தொடரும்
நிழல் யுத்தம் இதனால்
நித்தம் நித்தம்
இரத்தம் சிந்தும்
உறவுகளைப் பாராய்......



நாயின் குரைப்பொலியில்
தூக்கம் தொலைக்கும்
எம் விழிகள்
உறக்கத்தை மறந்து
எத்தனையோ நாளாச்சு

என்னவனே
மூடிய கறுப்புத் துணிக்குள்
மறைந்திருந்த முகமும்
உறுத்துப் பார்க்கும் விழிகளும்
இதயத்தை உறையவைக்கும்
ஆவேசமாக......

ஒவ்வொரு தடை தாண்டும் போதும்
எரிமலையாகும் இதயம்
மறுகணமே மரணப்பீதியில் சுருண்டு
கொள்கிறது
இனம் புரியா அச்சத்துடன்......

மாறாத இந்நிலைமை.......?
மலராதா சமாதானம்.......?

தமிழன் தோழி



## சிறுவர் நாம் முத்துக்கள்

என்னை மலர விடுங்கள்
என்னை வாழ விடுங்கள்
என்னை சிந்திக்க விடுங்கள்
என்னை முடிவெடுக்க விடுங்கள்
என்னை செயல்பட விடுங்கள்

உலகில் வாழும் அனைத்து மானிடமும்
ஓர் சிறார்களே அதை பல
மனிதமனம் உணராததால்
உன் உரிமைகளை தின்று
ஏப்பமிடுகிறது.
தம் வேலைப்பழுக்களை குறைக்க
உன்னை கருவியாய்
பயன்படுத்தும் மனித வடுக்கள்
உன் எதிர்காலம் ஓர்
புதைகுழியில் அல்ல
பஞ்சு மெத்தையில் தான்.
உன்னது என நினைக்கும்
வரை உன் உரிமைக்காய் போராடு.
உன் கல்வி, உன் தேவைகளை புரிந்து
உன்னை ஏற்றுக்கொள்ளம் வரை
அதற்காய் போராடு
உன்னை காலில் அணியும்
பாதணியாக
அல்லாமல் தலையில்
அணியும் மகுடமாக பயன்படுத்த
அவன் மதிக் கண்களை
திறந்து உன் மலர் வாழ்வை
மலர விடட்டும்.

அ. மதுஜா
யா/ வேம்படி மகளீர் கல்லூரி தரம் - 7

### மனிதனது ஆறறிவுகள்



- உணர்ந்தறிவு
- சுவைத்தறிவு
- பார்த்தறிவு
- முகர்ந்தறிவு
- கேட்டறிவு
- பகுத்தறிவு

L. Pratheepay, Manipay Y.M.C.A

## ஆடும் ஓநாயும்

ஆட்டுக்குட்டிகள் பல ஒரு வீடுகட்டி அதற்குள் தாயும் தாங்களும் வாழ்ந்தார்கள். ஒருநாள் தாய் இரை தேடச் செல்லும் போது "ஓநாய்க்கூட்டம் ஒழிக" எனக் கூறிவிட்டுச் சென்றது. இதை ஒட்டிப்பார்த்திருந்த ஓநாய் "ஓநாய்க் கூட்டம் அழியட்டும்" என ஆட்டின் வீட்டுக்கு அருகே சென்று கூறியது. உடனே ஒரு குட்டி கதவைத் திறக்க எத்தனித்தது. உடனே ஒரு குட்டி "அம்மா உனது தாடியை எங்களது யன்னல் வழியாகக் காட்டு" எனக் கூறியது. உடனே ஓநாய் வெட்கித் தலை குனிந்து சென்றது.

எனவே "ஒரு கூற்றிற்கு இரட்டைப் புத்தி வேண்டும்"

பா. லக்சலா

## சிந்தனைக்குச் சில துளிகள்

1. நீ பனிக்கட்டி போல் குற்றமில்லா திருந்தாலும், பனி போல் பரிசுத்தமாய் இருந்தாலும், பழிச் சொல்லில் இருந்து தப்பமுடியாது.
2. ஒரு மனிதனுடைய ஆசைகள் எல்லை யற்றவையாக இருந்தால் அவனுடைய முயற்சிகளும் எல்லையற்றவையாக ஆகிவிடும்.
3. ஆசையின் வேட்கையினை அடக்கவும் முடியாது. தீர்த்து வைக்கவும் முடியாது.
4. உங்களை நீங்களே மதிப்பது ஆணவம். பிறர் உங்களை மதிப்பதே பெருமை.
5. உண்மைக்கு பயப்படுகின்றவன் ஒருவருக்கும் பயப்படவேண்டியதில்லை.

செ. துளசிகா, தரம் - 11A
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

## "Kutty" Jokes

மது – தீபாவளிக்கு சாப்பிடுகிற ஒன்று பொங்கலிற்கு சாப்பிட முடியாது அது என்ன?

கபில் – தெரியாது நீயே சொல்லு.

மது – தீபாவளிக்கு நீ பொங்கல் சாப்பிடலாம் ஆனால் பொங்கலுக்கு தீபாவளி சாப்பிட முடியாது.

மீரா :– "அவரை மாதிரி ஒரு மகா சோம்பேறியைப் பார்க்கவே முடியாது"

மோகனா :– "அப்படியா?"

மீரா :– "ஆமாம், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பல்லுத்தான் தேய்ப்பார் எண்டால் பாரேன்"

மோகனா
கல்வியங்காடு,

### காத்திருக்க முடியாது

பத்து மூடை அரிசியை உடனடியாக அனுப்பி வைக்குமாறு ஒரு சில்லறை வியாபாரி தாம் வழமையாக பொருள் கொள்வனவு செய்யும் மொத்த வியாபாரிக்கு தந்தி மூலம் செய்தி அனுப்பினார்.

"இதற்கு முன்னர் கொள்வனவு செய்துள்ள பொருட்களுக்குரிய பணத்தை செலுத்திய பின்னரே புதிதாகப் பொருள் அனுப்ப முடியும்" என்று பதில் அனுப்பினார் மொத்த வியாபாரி.

"மன்னிக்கவும்! அவ்வளவு நீண்ட காலத்திற்கு எம்மால் காத்திருக்க முடியாது. எனவே நாம் வேறு யாரிடமாவது வாங்கிக் கொள்ளுகின்றோம்." என்று அடுத்த தந்தி வந்தது சில்லறை வியாபாரியிடமிருந்து.

## சிரிக்க சிந்திக்க

### ஆலோசனை

நோயுற்ற கிராமத்தவர் ஒருவர் சிகிச்சை பெறுவதற்காக அடுத்துள்ள நகரில் தொழில் புரியும் விசேட வைத்திய நிபுணர் ஒருவரிடம் சென்றார்.

"நீர் என்னிடம் வரமுன்னர் யாராவது வைத்தியரிடம் சென்றீரா?" எனக் கேட்டார் வைத்திய நிபுணர்.

"ஆம்! எமது கிராமத்தில் இருக்கும் வைத்தியர் வைத்திலிங்கத் திடம் போனேன்" என்றார் அந்த மனிதர்.

"அந்த முட்டாளிடமா போனீர்? அவன் ஏதாவது முட்டாள் தனமான ஆலோசனைகள் சொல்லியிருப்பானே!" என்று ஆணவத்தோடு கேட்டார் வைத்திய நிபுணர்.

"ஆம் உங்களிடம் போய்க் காட்டச் சொன்னார்" என்று கூறினார் நோயுற்ற கிராமத்தவர்.

### நகைச்சுவை

தகப்பன் :– நான் உன் மாதிரி சிறுவனாக இருந்தபோது பொய் சொன்னதே இல்ல.

மகன் :– அப்ப எப்போ ஆரம்பித்தீர்கள்.

**S.K.Vani**
**Dr. T.M.M.V**

### S.M.S Joke

Vijaykku appadi poodu
Vikramukku O poodu
Enakku our SMS poodu
Illaddy un phone i
thukki kuppajil poodu.

ஆசிரியர் – ஏன்டா பரீட்சை எழுத வந்திட்டு தூங்கிறாய்?

மாணவன் – கேள்விக்கு பதில் தெரியாவிட்டால் 'சும்மா முழிச்சுக்கொண்டு இருக்காதை எண்டு' அப்பா சொன்னார் சார்.

சு.கார்த்திக்கா

அட்டைப்பட விளக்கம்

# 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற பெண்மணி

உலக வரலாற்றில் 1917ம் அண்டு மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த ஆண்டிலேயே முதலாம் உலகப்போர் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. அதே ஆண்டிலேதான் பாரதநாட்டில் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவியாக விளங்கிய இந்திரா காந்தி அம்மையார் பிறந்தார்.

1917ம் அண்டு நவம்பர் 19ம் திகதி ஜவகர்லால் நேரு – திருமதி கமலா ஜவகர்லால் நேரு என்பவர்களுக்கு ஒரே மகளாக இந்தியாவின் அகலபாத் என்னும் இடத்தில் "ஆனந்த பவன்" என்னும் மாளிகையில் இந்திரா பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இந்திரா பிரியதர்சினி.

"ஆனந்த பவன்" 37 அறைகளைக் கொண்ட அழகிய மாளிகையாக விளங்கியது. அவருடைய தாத்தா மோதிலால் நேரு பெரிய கோடீஸ்வரராக விளங்கினார். மோட்டார் கார் கண்டுபிடிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் இந்தியாவில் முதன் முதலில் இக்காரை இறக்குமதி செய்து ஆனந்த பவனுக்கு கொண்டு வந்தவர் அவரே.

இந்திரா சிறு குழந்தையாக இருந்த போது இந்தியாவில் சுதந்திர போராட்டம் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேருவும் அவர் மனைவி கமலாவும் அடிக்கடி சிறைக்குச் சென்றதால் இந்திரா ஆனந்த பவனில் தனியாகத் தன் காலத்தைக் கழித்தார். 1925ம் ஆண்டில் இந்திராவின் தாயார் சுகயீனமுற்றார். வைத்தியர்களின் ஆலோசனைப்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு மருத்துவ சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு பெற்றோருடன் இந்திராவும் கூடச் சென்றார். தாயார் மருத்துவ சிகிச்சை பெற்ற அதே வேளை இந்திராவும் சுவிட்சர்லாந்தில் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

> 08.03.2008இல் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

## கல்வி

இந்திரா பல்வேறு துன்பங்களின் மத்தியிலும் தன்னுடைய கல்வியை ஆரம்பத்தில் கல்கத்தாவிலே இருந்த ரவீந்திரநாத்தாகூர் நடத்தி வந்த "சாந்தி நிகேதனிலும்" பின்னர் சுவிட்சர்லாந்திலும், பின் அகலபாத் ஆனந்த பவனில் மோதிலால் நேரு வைத்திருந்த நூல் நிலையத்தில் இருந்தும் பெற்றுக் கொண்டார். இவற்றைவிட நேரு சிறையிலிருந்த போது மகளுக்கு எழுதிய கடிதங்களில் குறிக்கப்பட்டிருந்த உலக சரித்திரக் குறிப்புகளிலிருந்து அதிகம் கற்றுக் கொண்டார். சுருங்கக் கூறின் இந்திரா பள்ளியில் கற்றதை விட நூல் நிலையத்திலிருந்து கற்றவையே அதிகம் எனலாம்.

## தாயாரின் மரணம், இந்திராவின் திருமணம்


சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்ட ஓர் வாலிபன் பெரோஸ் காந்தி. அவர் மோதிலாலையும், நேருவையும் சந்திக்க ஆனந்த பவனுக்கு அடிக்கடி வருவார். அதனால் நேரு குடும்பத்துக்கும் அவருக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. சுவிட்சர்லாந்திலிருந்து தாயார் கமலா ஜேர்மனியின் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் உடல்நிலை மோசமடைந்து இருப்பதை அறிந்து பெரோஸ் காந்தி அவரைப் பார்ப்பதற்கு ஜேர்மனி சென்றார். அவர் நேரு குடும்பத்திற்கு அதிகம் உதவியாக இருந்தார். தாயாருக்கு சுகம் கிடைக்கவில்லை. அவர் மறுபடியும் சுவிட்சர்லாந்தின் சலரோக மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டு குணமடையாமலே 28.02.1936ல் மரணமடைந்தார். தாயாரை 19 வயதில் இழந்த இந்திரா சுவிட்சர்லாந்திலேயே தன் கல்வியைத் தொடர்ந்தார்.

தாயாரின் இழப்பினால் கவலையடைந்திருந்த இந்திராவுக்கு பெரோஸ் காந்தி மிகவும் ஆறுதலாக இருந்தார். அவர்கள் இருவரிடையேயும் காதல் மலர்ந்தது. தனது விருப்பத்தை இந்திரா தந்தையாரிடம் தெரிவித்தார். அப்போது தந்தை ஜவகர்லால் சிறையில் இருந்தார். பெரோஸ்காந்தி "பார்சி" மதத்தைச் சேர்ந்தபடியாலும், நடுத்தர அந்தஸ்து கொண்டிருந்தபடியினாலும் தந்தை இத்திருமணத்தை விரும்பவில்லை. ஆனால் இந்திராவின் பிடிவாதத்தினால் "மகாத்மாவைச் சந்தித்து, உன் விருப்பத்தைத் தெரிவி. அவர் உடன்பட்டால் எனக்கு ஆட்சேபனை இல்லை" என நேரு தெரிவித்தார். இந்திரா மகாத்மாவிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். "இருமனமும் ஒன்றுபட்ட பிறகு சாதியின் பேரிலோ, சமயத்தின் பேரிலோ அதற்குத் தடை போடக் கூடாது. உங்கள் திருமணத்துக்கு என் ஆசீர்வாதம் உண்டு" என்றார் காந்திஜி. 26 மார்ச் 1942இல் இந்திரா – பெரோஸ் காந்தி திருமணம் இந்திரா பிறந்த ஆனந்தபவனிலேயே சிறப்பாக

நடைபெற்றது. திருமணத்துக்குப் பிறகு இவர்கள் அலகபாத்தில் ஒரு வாடகை வீட்டில் குடியேறினர். 20.08.1944இல் அவர்களுக்கு முதல் குழந்தை ஆண்குழந்தையாகப் பிறந்தது. அதற்கு ராஜீவ் என பெயரிட்டனர். அடுத்த குழந்தை சஞ்செய் 14.12.1946இல் பிறந்தார்.

**கணவரின் மரணம்**

தந்தையார் 1937ஆம் ஆண்டு "National Herald" எனும் பத்திரிகையை நடத்தி வந்தார். இப்பொறுப்பை பெரோஸ் அவர்களிடம் ஒப்படைத்தார். சுதந்திரத்திற்குப் பிறகு நேரு இந்தியாவின் பிரதமரானார். அப்போது இந்திராவின் கணவர் பெரோஸ் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். 08.09.1960இல் இந்திராவின் கணவர் பெரோஸ் காந்தி திடீரென மாரடைப்பால் காலமானார். அப்போது இந்திராவுக்கு வயது 43. கணவருக்கு வயது 48. கணவரின் எதிர்பாராத மரணத்தால் இந்திரா ஆறாத் துயருற்றார். தந்தையின் பணிகளிலும், பிள்ளைகளைக் கவனிப்பதிலும் அதிகம் ஈடுபட்ட இந்திரா காங்கிரஸ் கட்சியின் பணிகளிலும் தீவிரமாகச் செயற்பட்டார்.



**இந்தியாவின் பிரதமர்**

நேரு வெளிநாடு சென்றபோதெல்லாம் அவருடன் இணைந்து சென்றமையால் உலகத் தலைவர்களுடன் அதிகம் அறிமுகமானார். அத்துடன் அவர்களையும் கவர்ந்து கொண்டார். 27.05.1964இல் தந்தை நேரு மரணமானார். அதைத் தொடர்ந்து லால் பகதூர் சாஸ்திரி இந்தியாவின் பிரதமரானார். இந்திராவின் திறமை நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்று விரும்பிய சாஸ்திரியும், காமராஜரும் இந்திராவை ஒலிபரப்புத்துறை அமைச்சராக நியமித்தனர்.

எதிர்பாராத விதமாக 11.01.1966 அன்று சாஸ்திரி மாரடைப்பால் மரணமானார். அடுத்த பிரதமர் யார் என்ற வாக்கெடுப்பில் 355 வாக்குகளைப் பெற்று இந்திரா இந்தியாவின் பிரதமரானார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட மொரார்ஜி தேசாய் 169 வாக்குகளைப் பெற்று தோல்வியைத் தழுவினார்.

பிரதமர் பதவி இந்திராவுக்கு புதிதாக இருந்தாலும் தந்தை நேருவிடம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் அவருக்குக் கை கொடுத்தன. இதன் மூலமாக நாட்டின் சிக்கலான பிரச்சினைகளான மிஜோ மலைவாசிகளுக்கும், நாகர்களுக்குமான பிரச்சினையை திறமையாகத் தீர்த்து வைத்தார். பஞ்சத்தைப் போக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார். 1971.12.04இல் பாக்கிஸ்தான், இந்தியா மீது தொடுத்த போரை முறியடிக்க அவர் எடுத்த முயற்சிகள் பலராலும் பாராட்டப்பட்டன. இதன் மூலம் பாக்கிஸ்தானில் இருந்து அதன் கிழக்குப் பகுதி விடுபட்டு "வங்காள தேசம்" என்ற பெயரின் தனி சுதந்திர நாடாகியது. இந்த வெற்றிக்குக் காரணமான இந்திரா காந்திக்கு ஜனாதிபதி வி. வி. கிரி "பாரத ரத்னா" என்ற உயர் விருதை வழங்கி கௌரவித்தார்.

**மகன் சஞ்செய் மரணம்**

1977இல் ஏற்பட்ட நெருக்கடி நிலையில் அவர் பெற்ற தேர்தல் வெற்றி செல்லுபடியாகாது என நீதிமன்று வழங்கிய தீர்ப்பினால் பிரதமர் பதவியை இழந்தார். ஆனால் 3 ஆண்டுகளின் பின் 1980.01.14ம் திகதி 4ஆவது தடவையாக இந்தியாவின் பிரதம மந்திரியானார். அந்த சந்தோசத்தில் இருந்த வேளை 1980 ஜூன் 23இல் மகன் சஞ்செய் விமான விபத்தில் மரணமானார். அவர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது டில்லியில் அந்த விமானம் விழுந்து நொறுங்கியது. அது இந்திரா காந்தியை வெகுவாகத் துயரப்படுத்தியது.

**இந்திரா சுட்டுக் கொலை**

விமானியாக இருந்த மூத்தமகன் ராஜீவ் காந்தியைத் தனக்கு உதவியாக இந்திரா அழைத்தார். 1984இல் தனிநாடு கேட்ட சீக்கியர் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது. பொற்கோயில் முற்றுகையில் நூற்றுக்கணக்கான சீக்கியர் கொல்லப்பட்டனர். பொற்கோயிலும் சேதமடைந்தது. ஆத்திரமடைந்த அவரது மெய்ப்பாதுகாவலர்களாலேயே 1984 ஒக்டோபர் 31ஆம் திகதி இந்திரா பிரியதர்சினி காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அகில உலகிலும் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற பெண்மணியாக, வீரப் பெண்மணியாக அவர் வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படுகின்றார். உயர்ந்த இலட்சியத்துக்காகவே வாழ்ந்து, அந்த இலட்சியத்துக்காகவே உயிர்துறந்த இந்திரா பெண்சமூகத்துக்கே பெருமை சேர்ப்பவர்.

தொகுப்பு :- A.S. தேவகுணானந்தன்

தேடல் 4

# சொற்களின் கருத்தோட்டம் வாழ்வியலின் போராட்டம்

போராட்டத்தின் தோல்வியும் வெற்றியும் உலவியலின் பட்டறிவு இன்று தொண்டு என்ற சொல் நம்முடைய வாழ்வியலுடன் இணைந்து செல்லும் ஒன்றாகிவிட்டது. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் எம்முடைய பிரதேசங்களில் தம் தொண்டைச் செய்கின்றது. சமயம் சார்ந்தவர்களும் தொண்டு செய்கின்றார்கள். தொண்டுக்கு முதலீடு செய்பவர்கள் தூரத்தில் இருக்கின்றார்கள். தொண்டுப் பணியைச் செய்பவர்களும் செய்விப்பவர்களும் நம் மத்தியில் தொண்டுப் பணி செய்துகொண்டிருக்கின்றார்கள்.

தொண்டுப் பணியில் ஈடுபட்டிருப் பவர்கள் கை நீட்டி காசு வாங்குபவர்கள். அவர்கள் தம் பணியைக் கடமை என்று செய்வார்களா? பணி என்று செய்வார்களா? பணி என்பது எது? கடமை என்பது எது? பணி என்பது தாம் யாருக்கு கடமை செய்ய அமர்த்தப்பட்டார்களோ அவர்களுக்கு உண்மையாய் இருப்பது. கடமை என்பது தம்மை கடமையில் அமர்த்தியவர் களுக்கு உண்மையாக இருப்பது.

கடமையில் அமர்த்தியவர் தொண்டுள்ளம் கொண்டவரும் அன்பும் இரக்கமும் உள்ளவரும் தம்முடைய தொண்டு கடவுளின் அருளன்பில் செய்யப்படும் ஒன்று என்ற உண்மைத்தன்மை உள்ளவரும், தொண்டுப் பணியால் சிறப்புப் பெறுவது தொண்டு செய்பவர் அல்ல. தொண்டைப் பெறுபவரே என்ற இலக்கணம் உள்ளவரு மாயிருந்தால் கடமைக்கமர்த்தப்பட்டவரையும் அவ்வழி நடத்துவார். இல்லையேல் தொண்டு நடைபெறும் தொண்டுக்குள்ளே கண்டு சொன்ன ஒன்றுமே இருக்காது.

தொண்டு செய்ய அமர்த்தப்பட்டவர் தன் தொண்டு கடமைக்கானதல்ல பணிக்கானது என்று உணரும் போது பணி தூய்மைத் தன்மை உடையதாகவிருக்கும். பணி செய்யும் இடத்தின் உள்ளும் புறமும் தூய்மைத்தன்மை உடையதாக இருக்கும். மனித மாண்பு மதிக்கப்படும்.

தூய்மைத்தன்மை இல்லாத தொண்டு மையங்கள் விமர்சனங்களுக்குள்ளாகும். காலம் கடந்து பார்க்கும் போது தொண்டு மையங்களின் பயனாளிகளே எதிராளிகளாகுவர்.சமயத்தின் பெயரால் நடைபெறும் தொண்டு மையங்களில் சமய உண்மைகள் கலந்திருக்க வேண்டும். சமய உண்மைகளும், சமய நாகரீகங்களும் இளை யோடாத தொண்டு மையங்கள் சமயத்தைப் பழிக்கின்ற தொண்டையே செய்யும். இது "குளிக்கப் போய் சேறு பூசிய கதையை" ஒத்திருக்கும்.

இத் தொண்டு மையங்களின் கதை இதுவாகக்கூடாது. தொண்டுள்ளம் கொண்டவர்க்கு இருக்க வேண்டிய இலக்கணம் உண்மை, அன்பு, இரக்கம்.

*உண்மையுள்ள தொண்டு குற்றப்படாது*
*அன்புள்ள தொண்டு துன்பத்தில்*
*மகிழ்ந்திருக்கும்*
*இரக்கமுள்ள தொண்டு பிறருக்கு இன்பம்*
*செய்யும் இம் மூன்றும்*
*ஒன்றிணைந்த தொண்டில்*
*அசைவாடுவது கடவுளுடைய அருள்.*
*உண்மை, அன்பு, இரக்கம் என்ற மூன்றும்*
*எல்லா மனிதரிடத்திலும் இருப்பது.*
*இருப்பது வரை ஆரம்பிக்கும் போது*
*துணைக்கு வருவது கடவுளுடைய அருள்.*
*கடவுளுடைய அருளினால் மனிதனுக்குள்*
*நல்லியல்பூக்கங்கள் மறைத்து*
*வைக்கப்பட்டுள்ளன*
*தேட வேண்டியவன் மனிதன்.*

கடவுளுடைய அருளோடு செய்யப்படுவதே அருட்தொண்டு. தொண்டுப் பணியில் தொண்டுப் பணியாளன் பெருமைப் படுவதில்லை. பயனாளியைப் பணியாளன் பெருமைப்படுத்துவது பயனாளியை அடிமைப் படுத்துவதல்ல. அவனுக்கு அன்பு செய்வது. பல்லக்கில் ஏறிப்போகத்தான் தொண்டன்

விரும்புகின்றான். பல்லக்கில் தூக்கிச் செல்பவனே உண்மையான தொண்டன். நன்மை செய்பவனுமவனே. இதையே எம் பெருமான் (யோவான் 13:14–15) இல் கூறுகின்றார்.

எம் பெருமான் பாதிக்கப்பட்ட மக்களின் தொண்டனாகவே செயற்பட்டார். கடவுளும் பாதிக்கப்பட்டவர்களின் தொண்டராகவே இருந்தார். இந்த உண்மையை எம்பெருமான்(யோவா 5:17) இல் குறிப்பிடுகின்றார். தொண்டு என்பது வடிவத்தில் மாறும். அடிப்படையான உண்மை மாறாது.

அடிப்படை ஒழுங்கென்பது உண்மை, அன்பு, இரக்கம் இவை மூன்றின் இணைப்பே ஆகும். பிறருக்குத் தொண்டு செய்பவர் மிக எளிதில் அகங்காரம் கொண்டு விடுவர். தங்கள் உதவியாலேயே இவர்கள் வாழ்கின்றார்கள் என்று உயரிய நிலையிலுள்ளவர் உதவி பெறும் பயனாளிகளை அலட்சியப்படுத்துவர்.

இன்று நம்மவர் ஏழைகளுக்குத் தொண்டு செய்கின்றனர். தம் தொண்டை ஏற்கும் பயனாளிகள் தொண்டு செய்பவருக்கு ஓயாது தலையசைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். தாம் இட்ட கட்டளைகளைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று கருதுகின்றனர். மொழியிலே பணி பற்றிய பேச்சு இருக்கும். மூச்சிலே சுயநலம் முளைத்து வளரும். சுயநலம் மூச்சிலே முளைக்காதிருக்க உதவுவது பக்தியே ஆகும். பக்தி என்பது பற்றிய கருத்தியல்:

அ. இறைப்பொருள் இடத்திற்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அன்பு பக்தி. (1 கொரி 13:)

ஆ. எல்லாத் தொழில்களையும் ஒருமுகப்படுத்தி இறைவனுடைய பணியில் இணைந்து செல்வது பக்தி (யோவா 6:66–68)

இ. பக்தி எல்லாவற்றையும் இழக்கச் செய்வது (லூக்கா 19:8)

ஈ. பொறியுணர்வையும் உணர்வைத்தூண்டும் ஆசைகளையும் விடுவது பக்தி தரும் சித்தி (யோவா 8:11)

உ. பற்றிலிருந்து விடுபடல் என்பது அன்பு நிறைந்த தொண்டை விடாமல் செய்வது (யோவா 21: 15– 17) பக்தி.

ஊ. பக்தன் என்பவன் தன்னல அடிப்படையில் எதையும் செய்ய மாட்டான் (லூக்கா 10: 35) சுயநலம் தவிர்ப்பது பக்தி

எ. அவன் செய்யும் எத்தொண்டும் கடவுளுக்கே செய்வதால் அவனுடைய தொண்டு அவனுடையதல்ல. (யோவா 3:30) இது பக்தி.

கடவுட்தொண்டு என்பது மக்கள் தொண்டு. செருக்கடக்கிச் செய்யும் சீரிய தொண்டு. சமயம் சார்ந்து செய்பவருக்கு தொண்டுக்கான பொருள் அவரிடம் செல்லும். மற்றவருக்கல்ல. இறை அடியாராகத் தொண்டு செய்யப் புறப்பட்டவரின் வாழ்வியலைப் பற்றிப் பெரியபுராணம் தரும் அறிவு வருமாறு:


*"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்*
*ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்*
*கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி*
*வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."(143)*

செல்வம் இல்லாத போதும் இன்புற்று இருப்பவர்களே தொண்டர்கள். ஓடு போன்ற மதிப்பில்லாப் பொருளும் பொன்னை ஒத்த உயர்நிலைப் பொருளும் சமநிலை கொண்டதாக பார்ப்பவர்களே தொண்டர்கள். கூடும் அன்பருடன் கடவுளைக் கும்பிட்டுக் குதூகலிப்பவர்களே தொண்டர்கள். இவர்கள் வீட்டின்பம் (விண்ணரசு வாழ்வு) தேடமாட்டார்கள். இவர்கள் தேடுவது தொண்டின்பம். இவர்கள் பயன் கருதாது தொண்டு செய்யும் பண்பாளர்கள். தொண்டே இவர் பக்தி.

*"தொண்டைப் பக்தி என்று கருதாது செய்யும்*
*தொண்டு தொண்டல்ல*
*தொண்டைத் தொண்டென்று செய்யாதவர்*
*தொண்டு நின்று நிலைப்பதில்லை*
*நின்று நிலைப்பது பக்தி*
*சென்று தொலைவது புத்தி*
*பக்திக்கு முதலிடம் கொடு புத்தி செழிக்கும்*
*புத்திக்கு முதலிடம் கொடுத்தால்*
*பக்தி தொலையும்" (பிலிப் 3:11)*

**வண. ஆ. வே. இயேசுதாசன்**
**உடுவில்.**

## அவசர தொலைபேசி இலக்கம்



| | |
|---|---|
| யாழ் வைத்தியசாலை | - 021 222 3348 |
| யாழ் மாநகரசபை | - 021 222 2275 |
| யாழ் மின்சாரசபை | - 021 222 2496 |
| யாழ் தீயணைப்புப்படை | - 021 222 3556 |
| யாழ் செயலகம் | - 021 222 2235 |
| யாழ் பொலிஸ்நிலையம் | - 021 222 2222 |
| யாழ் நீதிமன்றம் | - 021 222 2357 |
| யாழ் தபாலகம் | - 021 222 2250 |
| சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் | - 021 222 2026 |
| சம்பந்தர் சிகிச்சை நிலையம் | - 021 222 7259 |
| போரூட் | - 021 222 2177 |
| உதயன் | - 021 222 2030 |
| உதயன் | - 021 222 2083 |
| உதயன் | - 021 222 3837 |
| வலம்புரி | - 021 222 3387 |
| தினக்குரல் | - 021 222 2127 |
| போக்குவரத்துசபை (கோண்டாவில்) | - 021 222 2207 |
| போக்குவரத்துசபை (கோண்டாவில்) | - 021 222 2280 |
| மனித உரிமை ஆணைக்குழு | - 021 222 2021 |
| மின்சாரசபை (சுன்னாகம்) | - 021 222 3001 |
| மின்சாரசபை (சுன்னாகம்) | - 021 222 3002 |



## கார்களும் உற்பத்தி செய்யும் நாடுகளும்.

| | |
|---|---|
| மாருதி | - இந்தியா |
| ஃபோர்ட் | - அமெரிக்கா |
| டொயாட்டா | - ஜப்பான் |
| பியட் | - இத்தாலி |
| பேஜோ | - பிரான்ஸ் |
| றெனோல்ட் | - இங்கிலாந்து |
| மேர்சிடஸ் பென்ஸ் | - ஜேர்மனி |

## சுருக்கக்குறியீடுகள் / Abbreviations

| | |
|---|---|
| C.T.B | - Ceylon Transport Board |
| S.L.T.B | - Sri Lankan Ceylon Transport Board |
| B.B.C | - British Broadcasting Corporation |
| B.A | - Bachelor of Arts |
| B.Com | - Bachelor of Commerce |
| B.Ed | - Bachelor of Education |
| M.A | - Master of Arts |
| M.Phil | - Master of Philosophy |
| B.C | - Before Christ |
| A.D | - (Anno Domini) in the year of our Lord. |

## போர் விமானங்களும் உற்பத்தி செய்யும் நாடுகளும்.

| | |
|---|---|
| புக்காரா | - ஆர்ஜென்டீனா |
| Y12 | - சீனா |
| கிபிர் | - கஜகஸ்தான் |
| சுப்பர்சொனிக் | - ரஷ்யா |
| மிராஜ் | - பிரான்ஸ் |
| அன்ரனோவ் | - உக்ரெய்ன் |
| சுப்பர் பூமா | - பிரான்ஸ் |
| கல்கார் ஹெலிகொப்ரர் | - பிரான்ஸ் |
| சுப்பர் ஏற்றன் டாட் | - பிரான்ஸ் |
| ஜக்குவார் விமானம் | - பிரான்ஸ் |

## பெயரின் முதல் எழுத்துக்குள் பொதிந்திருக்கும் குண நலன்கள்

**K** இந்த சப்தத்திற்கு சிவப்பு வர்ணம். தாய்மை உணர்ச்சியைத் தூண்டும். பல கலைகளும் கற்பர். முன்னேற்றமடையவும் மேலும் மேலும் நிலையான காரியங்களைச் செய்யவும் பிரியம் இருக்கும். தன் இனத்தவரைக் காப்பதில் ஆர்வம் உண்டு. மேன்மையானவரானால் உலகத்திற்கே சேவை செய்வார்.

**L** பிறரை வேலை வாங்குவதில் நிபுணர்கள். இதனால் குறிக்கப் பெறுவர். சதா ஏவிக் கொண்டே இருப்பார்கள். ஒன்றையும் மறக்கமாட்டார்கள். நினைத்ததை நடத்தியே தீருவார்கள். வெளியே காட்டிக்கொள்ளமல் ஆணி வேரை இரகசியமாக அறுத்து விடுவார்கள். காரியவாதிகள். சிவப்பு வர்ணம்.

J. காண்டீபன்

தொடரும்.........

## குறுக்கெழுத்துப் போட்டி இல 01

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | ■ | 3 |
| 4 | | ■ | 5 | | |
| 6 | | 7 | ங் | ■ | |
| ■ | 8 கு | | | | ■ |
| 9 | | ல் | | ■ | 10 |
| 11 | | ■ | ■ | 12 | |

முழுப்பெயர் :- ........................

..............................................

தபால் முகவரி :- ........................

..............................................

கையொப்பம் :- ........................

..............................................

**குறிப்பு :-**

மகுடம் சஞ்சிகையின் குறுக்கெழுத்துப் போட்டி பகுதியிலுள்ள வழிகாட்டல்களை கவனித்து மேற்படி கட்டங்களை தெளிவாக பூர்த்தி செய்து "மகுடம் சஞ்சிகை", நவாலி வை. எம். சி. ஏ, நவாலி, மானிப்பாய். என்னும் முகவரிக்கு 31.03.200றக்கு முன்பாக அனுப்பி வையுங்கள்

போட்டி

சரியா...

நிரப்பிக் கி...

கிடைக்கச்...

பெறும் அ...

1. கைதிகள்...
கோட்டை...
அமைக்க...
4. "இறுதி"...
5. நெல்லி...
6. படையெ...
விமானப்...
8. பாதத்தி...
9. ஒரு வ...
11. மாமரம்...
12. செங்கல்...

IQ

அல்லது ...
வாங்கக்கூடி...
ஒரு தோடம்பழத்தை மட்டும் வாங்குவாளாயின் எத்தனை மாம்பழங்களை வாங்க முடியும்?

2. சீனியின் விலை 25% அதிகரித்த நிலையில் சீனிக்கான கொள்வனவுச் செலவு அதிகரிக்காதிருப்பதற்கு சீனியின் நுகர்வினை எவ்வளவு வீதத்தால் குறைக்க வேண்டும்?

3. கடிகாரத்தின் நேரம் 6 மணியாகும். நிமிடமுள் வடமேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின் மணி முள் எத்திசையைக் காட்டும்?

ஒத்திருந்தால் R எனவும் இல்லை எனின் W எனவும் குறிப்பிடுக.

i. னனனணணனனண - னனனணணனனன
ii. PITSBERGEB - PITSBERGEB
iii. 71171717346G92 - 7117717346 9G92

**விடைகள்**

1) 6 மாம்பழங்கள்
2) 20%
3) தென்கிழக்கு
4) சனிக்கிழமை
5) i. W ii. R iii. W

D.M.I

DMI DMI

# யாழ்ப்பாணம்

# JAFFNA

## மகுடம் சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெற வேண்டுமா?

### கட்டண விபரம்

| | முழுப்பக்கம் | அரைப்பக்கம் |
|---|---|---|
| பின் அட்டை (கலர்) | - 6000/= | 5000/= |
| பின் அட்டை | - 2000/= | 1000/= |
| உள் பக்கம் | - 1000/= | 500/= |

பிறந்தநாள், திருமணவாழ்த்துக்கள் - 200/=


ASTAN

அஸ்ரன் கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. T.P - 021-2224031

* G.A.Q, 1st in Commerce

வகுப்புக்கள் வெகு தூரத்தில் இல்லை....

தரம் 01 முதல் O/L, A/L வரையான வகுப்புக்கள்

கற்கத்துடிக்கும் மாணவ சமுதாயத்தின் வழிகாட்டி.



அச்சுப்பதிப்பு : றூபன் பிறிண்டேர்ஸ்.

முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386